உ
சிவமயம்

# அருணகிரிநாத சுவாமிகள்

அருளிய

# கந்தர் அனுபூதி



செல்வி சைதன்யா கமலநாதன்

அவர்களின்

நினைவு வெளியீடு

வெளியிடுவோர்:

மஞ்சத்தடி
விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்கம்
இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# செல்வி சைதன்யா கமலநாதன்

மண்ணில்
09-03-1983

விண்ணில்
09-02-1986

## திதிவெண்பா

போற்றுங் குரோதனஞ்சேர் பூர்பக்க ஞாயிறுதை
சாற்றும் **அவிட்டத்திற் சைதன்யா** – ஆற்றுது
பெற்றோர் தமரெல்லாம் பேதுற்றே ஏங்கியழ
உற்றுள் இறைவன் உலகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வெளியீட்டுரை

அமரத்துவம் எய்திய செல்வி சைதன்யா கமலநாதன் நினைவாக இந்நூலை வெளியிடும்போது ஒருபுறம் வேதனையும் மறுபுறம் வேதனை கலந்த மகிழ்ச்சியும் அடைகிறோம். குழந்தைகள் எல்லாம் தெய்வத்துக்குச் சமன். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்று கூறுவார்கள்.

செல்வி சைதன்யாவோ மனித உடல் எடுத்த தெய்வம் என்று கூறினால் அது பொய்யாகாது. குறைந்த வயதில் நிறைந்த அறிவுடன் மற்றவர்க்கு ஓர் எடுத்துக்காட்டாக திகழ சொற்ப காலத்திற்கு மனிதவுருவில் ஆண்டவனால் அனுப்பப்பட்ட ஓர் பேரறிஞரின் ஆத்மா என்றுதான் எண்ணத் தோன்றும். இச் செல்வியின் செயல்பாடு எல்லோரையும் அன்புடன் கவர்ந்தது. சின்னவயதிலேயே தெய்வ பக்தியுடன் இக்குழந்தை நடந்துகொண்டதனால் சமயப் பற்றுள்ளவர்களுக்கு பயன்படக்கூடிய முறையில் எமது சங்கத்தின் கல்வி கலாச்சாரப் பகுதியின் வெளியீடாக கந்தர் அநுபூதி வெளிவருவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். இந்நூலினை சைவ அன்பர்கள் கற்றுப் பயன்பெறுவார்களாக.

அன்புடன்

பொ. கனகசபாபதி

தலைவர்

மஞ்சத்தடி விவேகானந்தா

கிராம முன்னேற்றச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

# கந்தரநுபூதி

## காப்பு

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே. 1

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவினோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. 2

வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினுன் மறையோ
யானோ மனமோ வெனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே 3

வளைபட் டகைமா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
துளைபட் டுருவத் தொடுவே லவனே. 4

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுணின் றுதயங் குவதே. 5

திணியா னமனோ சிலைமீ துனதா
ளணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா வதிமோ கதயா பரனே. 6

கெடுவாய் மனனே! கதிகேள் கரவா து
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 7

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே 8

மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் படரென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியு
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே 9

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. 10

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியகா சுரலோ கசிகா மணியே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
யம்மா பொருளொன் றுமறிந் திலனே. 12

முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. 13

கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியா
மைவாய் வழிசெல் லுமவா வினையே. 14

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே. 15

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே. 16

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே. 17

உதியா மரியா உணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூ ரபயங் கரனே. 18

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
வடியந் தமிலா வயில்வே லரசே
மிடியென் றெருபா விவெளிப் படினே. 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியே
னுரிதா வுபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே. 20

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே. 21

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே. 22

அடியைக் குறியா தறியா மையினுன்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. 3

சூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமென் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதுளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ வடியே னலையத் தகுமோ
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே. 25

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே. 26

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயா
னென்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே. 27

ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானா நிலைநின் றதுதற் பரமே. 28

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே 29

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததெனு வுணர்வித் ததுதா
னவ்வா றறிவா ரறிகின் றதலா
லெவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. 30

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. 31

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே. 32

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. 33

சிங்கார மடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபால க்ருபா கரனே. 34

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
றுதியா விரதா சுரபூ பதியே. 35

நாதா குமரா நமவென் றரனு
ரோதா யெனவோ தியதெப் பொருடான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. 36

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவா
லரிவா யடியோ டுமகந் தையையே. 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதா ளியையொன் றறியேனை யறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
சூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே. 38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே. 39

வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே. 40

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே. 41

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே. 42

தூசா மணியுந் துகிலும் புனைவா
ளேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே. 43

சாடுந் தனிவேன் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. 44

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே. 45

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாண்
மைந்தா குமரா மறைநா யகனே. 46

ஆறு றையுநீத் ததன்மே னிலையைப்
பேறு வடியேன் பெறுமா றுளதோ
சீறு வருசூர் சிதைவித் திமையோர்
கூறு வுலகங் குளிர்வித் தவனே. 47

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ றும்வே லவனே. 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
வின்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே. 49

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவே
னதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. 50

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51

கந்தரநுபூதி முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org